# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.4

**Deposition of witness for }**

**Defence: -**

**Case No.** Sessions Case No.78/2015

| | | | |
|---|---|---|---|
| **Name** | கண்ணன் | **S/o.** | இருளப்பன் |
| **Village** | வேலூர் ஒத்தவீடு | **Taluk** | மானாமதுரை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.4 |
| **Date** | 20.12.2021 | **Age** | 22 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 20.12.2021.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் ஒத்தவீடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது திண்டுக்கல்லில் டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் திருப்பூர் ஹரிகிருஸ்ணா மில்லில் வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது மூத்த அக்கா பெயர் ராஜேஸ்வரி. இரண்டாவது அக்கா பெயர் கார்த்தீஸ்வரி. 04.01.2015 அன்று எங்கள் அப்பா இரண்டாவது அக்கா கார்த்தீஸ்வரியை கோயம்புத்தூரில் உள்ள ஆவாரம்பாளையம் கௌசல்யா மில்லில் வேலை செய்து வந்ததை பார்க்க சென்றார். அங்கு பெற்றோர்கள் தங்குவதற்கு வசதி இருந்தது. எனது அப்பா இரண்டு நாட்கள் தங்கி இருந்து எனது அக்காவை பார்த்துக்கொண்டார். 06.01.2015 அன்று இரவு 8.30 மணிக்கு

மேல் வேலூரைச் சேர்ந்த முனியாண்டி மகன் வீராச்சாமி என்பவர் எனது தந்தைக்கு போன் செய்து, உங்கள் மருமகன் பாண்டித்துரை குழந்தையைக் கேட்டு வீட்டில் தகராறு செய்வதாகவும், குழந்தையை தர முடியாது என உங்கள் மகள் கூறியதாகவும், அதற்கு எதிரி தனது முதுகில் வைத்திருந்த அருவாளை எடுத்து ஏண்டி தேவடியா முண்டை குழந்தையை தரமாட்டியா எனக் கூறி அரிவாளால் வெட்டியதாகவும், தடுக்க வந்த எனது தாயார் தனபாக்கியத்தையும் வெட்டியதாகவும், அங்கிருந்து ஓடிய அப்பத்தா ஆறுமுகத்தை வெட்டியதாகவும், மூன்று பேரும் இறந்து விட்டதாகவும், தடுக்க வந்தவர்களையும் வெட்டி விடுவதாக கூறி மிரட்டிவிட்டு குழந்தையை தூக்கிகொண்டு தப்பித்து ஓடிவிட்டதாக வீராச்சாமி சொன்னதை எனது தந்தை எனக்கு போன் மூலமாக கூறிவிட்டு நீ கிளம்பி தயாராக இரு நான் வந்து உன்னை கூட்டிச் செல்கிறேன் வாசலில் நில் எனக் கூறினார். எனது தந்தையும், எனது இரண்டு அக்கா கார்த்தீஸ்வரியும் என்னைக் கூப்பிட வந்தார்கள். அங்கிருந்து கிளம்பி மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு அதிகாலை 6.30 மணியளவில் வந்து சேர்ந்தோம். நாங்கள் போய் பார்க்கும்போது எனது அக்கா ராஜேஸ்வரி, எனது அம்மா தனபாக்கியம், எனது அப்பத்தா ஆறுமுகம் ஆகிய மூவரும் பிரேதமாக பிணவறையில் கிடந்தனர். அதன் பின்னீடு பிரேத பரிசோதனை நடைபெற்றது. நாங்கள் ஊரில் குலவழக்கப்படி நல்லடக்கம் செய்தோம். இந்த சம்பவம் சம்மந்தமாக போலீஸில் வீராச்சாமி புகார் கொடுத்தார். காவல் ஆய்வாளர் என்னை

விசாரித்தார். எதிரிக்கு எனது அக்கா ராஜேஸ்வரியை சம்பவத்திலிருந்து ஒன்றரை வருடத்திற்கு முன்பாக இரண்டாவதாக திருமணம் செய்து கொடுத்தோம். திருமணத்திற்கு பின்னீடு எதிரி சரியாக வேலைக்கு செல்லாமல் தண்ணி அடித்துவிட்டு தகராறு செய்து வந்ததால் எனது அக்கா எங்கள் வீட்டிற்கு வந்துவிடும். எனது அப்பாவும், அம்மாவும் சமாதானப்படுத்தி வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். அதன்பிறகு எதிரி அவர் அம்மா, அக்கா ஆகியோர் எனது அக்காவை வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்தியதால் எனது அக்கா வீட்டிற்கு வந்துவிட்டு மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வரதட்சணை புகார் மனு கொடுத்தது. அதில் யாரைக் கைது செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது அக்காவிற்கு திருமணத்திற்கு பின்னீடு ஒரு வருடம் கழித்து ஆண் குழந்தை பிறந்திருந்தது. அதற்குபிறகு அந்த வரதட்சணை வழக்கு நிலுவையில் இருந்தது. மானாமதுரை காவல் ஆய்வாளர் விசாரிக்கும்போது நான் அனைத்து விவரங்களையும் சொன்னேன்.

**எதிரி தரப்பு கு.வி:**

நான் பத்தாம்வகுப்பு வரை படித்து உள்ளேன். பத்தாம்வகுப்பு படித்து ஒரு வருடம் கழித்து திருப்பூருக்கு வேலைக்கு சென்றேன். தற்போது திண்டுக்கல்லில் டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊருக்கு அவ்வப்போது வந்து செல்வேன். நான் என்னை போலீசார் விசாணை செய்தபோது எனது இரண்டாவது சகோதரி கார்த்தீஸ்வரி வேலை

செய்த கோயம்புத்தூரில் உள்ள வாகரம்பாளையம் மில்லில் பணியாளர்களின் பெற்றோர்கள் தங்குவத்கென்று தனியாக குடியிருப்புகள் இருந்தது என்ற விபரத்தையும், 04.01.2015 அன்று எனது தந்தை அந்தக் குடியிருப்பில் தங்கி எனது அக்கா கார்த்தீஸ்வரியை பார்ப்பதற்காக இருந்தார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை போலீசார் என்னை விசாரணை செய்தபோது சொல்லவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அக்கா ராஜேஸ்வரிக்கு திருமணம் எப்போது நடைபெற்றது என்ற விவரம் எனக்கு சரியாக நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போது எனது அக்கா ராஜேஸ்வரிக்கு எதிரி பாண்டித்துரையுடன் நடைபெற்ற திருமணம் இரண்டாவது திருமணம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. போலீசார் விசாரணையில் எனது அக்கா ராஜேஸ்வரியை வேலூர் ஒத்தவீட்டைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் பாண்டித்துரை என்பவருக்கு கடந்த ஒன்றறை வருடங்களுக்கு முன்பு இரண்டாவதாக திருமணம் செய்து கொடுத்தோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் அதுவும் நினைவில் இல்லை. எனது அக்காவிற்கு திருமணம் நடைபெற்றபோது எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் சரியாக நினைவில் இல்லை. நாங்கள் அன்றைய தினம் கோயம்புத்தூரிலிருந்து பஸ்ஸில்தான் மானாமதுரைக்கு வந்தோம். அன்றைய தினம் எனது இரண்டாவது அக்கா கார்த்தீஸ்வரியும், எனது

தந்தையும் கோயம்புத்தூரிலிருந்து திருப்பூர் வந்து விட்டனர். திருப்பூரிலிருந்து நாங்கள் மூவரும் மானாமதுரைக்கு வந்தோம். வீராச்சாமி என்ன புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் வழக்கு பற்றி புகார் கொடுத்ததாக தெரிந்து கொண்டேன். யார்சொல்லி தெரிந்து கொண்டேன் என்றால் எனது அப்பா சொல்லி தெரிந்து கொண்டேன். எங்கள் வீடும், பாண்டித்துரை வீடும் முன்னும் பின்னுமாக உள்ளது. எனது அக்காவிற்கும், மாமாவிற்கும் சண்டை வரும் என்ற விபரமும் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். திருமணத்திற்கு பிறகு எனது அக்காவிற்கும், பாண்டித்துரைக்கும் சண்டை சச்சரவு எதுவும் வராது என்றும் அவர்கள் ஒற்றுமையுடன் தான் வசித்து வந்தனர் என்றும், நான் இந்த வழக்கிற்காக அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் வரும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மானாமதுரையிலும் புகார் கொடுத்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அக்கா ராஜேஸ்வரி எதிரியாலோ அல்லது அவரது குடும்பத்தினராலோ வரதட்சணை தொடர்பாக துன்புறுத்தப்படவில்லை என்றும், இது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தொடர்பான விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 07.01.2015-ம் தேதி நானும், எனது இரண்டாவது சகோதரியும், எனது

தந்தையும் காலை 6.00 மணிக்கு மானாமதுரைக்கு வரவில்லை என்றும் காலை 11.00 மணிக்கு தான் வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. வீராச்சாமி எனது அப்பாவிடம் யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் எனது அக்கா, அம்மா, மற்றும் எனது அப்பத்தாவை தாக்கியதால் அவர்கள் இறந்து விட்டனர் என்ற விபரத்தை தான் எனது அப்பாவிடம் தெரிவித்தார் என்றும், வழக்கிற்காக பொய்யாக அதை நான் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.